

இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

ஞாயிற்றுக்கிழமை 08-09-2024

# ஆயிரம் நிதியும் நிதி அமைச்சரும்

மகளிருக்கு மாதம்தோறும் ஆயிரம் ரூபாய் நிதி தருவது கூட ஒன்றிய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமனுக்குப் பொறுக்கவில்லை. அதிலும் கை வைக்கத் துடிக்கிறார்!

இரண்டு இயற்கைப் பேரிடர்களால் தமிழ்நாடு பாதிக்கப்பட்டு இரண்டு ஆண்டுகள் ஆனபிறகும் நிவாரண நிதி கொடுக்காமல் ‘டிமிக்கி’ கொடுத்து வரும் நிர்மலா சீதாராமனுக்கு, மகளிர் உரிமைத் தொகையைப் பார்த்தால் கண் உறுத்துகிறது.

“பெண்களுக்கு மாதம்தோறும் பணம் கொடுப்பதால் மட்டும் அவர்களது வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த முடியாது. அவர்களுடைய தொழில்திறனை மேம்படுத்துவதன்மூலம் தான் பெண்களை அசைக்க முடியாத சக்தியாக மாற்ற முடியும்” என்று சென்னைக்கு வந்து சொல்லிவிட்டுப் போயிருக்கிறார் நிதி அமைச்சர் நிர்மலா.

**விவசாயிகளுக்கு ஆண்டுக்கு 6000 ரூபாயை பிரதமர் மோடி வழங்குகிறார். அவரிடம் போய், “ஆண்டுக்கு 6000 ரூபாய் கொடுப்பதால் விவசாயிகளின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த முடியாது” என்று சொல்லும் துணிச்சல் நிர்மலா சீதாராமனுக்கு இருக்கிறதா? இந்த நிதியை ஆண்டுதோறும் விடுவிப்பதே நிர்மலாவின் நிதித்துறை தானே?**

பெண்களுக்கு மாதம்தோறும் ஆயிரம் ரூபாய் பணம் கொடுப்பதால் ‘அவர்களது வாழ்க்கைத் தரம் மேம்பாடு அடைகிறதா’ என்று அதனைப் பெறும் மகளிரிடம் போய் ஒன்றிய நிதி அமைச்சர் அவர்கள் கேட்க வேண்டும்.

ஒரு குவளைத் தண்ணீர், ஒரு உயிரைக் காப்பாற்றுமா? உயிர் வறண்டு போகும் நிலையில் இருக்கும் மனிதரிடம் கேளுங்கள். ஒரு குவளைத் தண்ணீர்தான் அவன் உயிரைக் காப்பாற்றி இருக்கும்!

**ஒரே ஒரு கவளம் சோறு, ஒரு உயிரைக் காப்பாற்றி இருக்குமா? பெருங்குடல், சிறுகுடலைக் கவ்வும் நிலையில் இருக்கும் குழந்தையிடம் கேளுங்கள். ஒரு கவளம் சோறுதான் அந்தக் குழந்தையைக் காப்பாற்றி இருக்கும்!**

சிறுசிறு மழைத்துளி, பெருநிலப் பரப்பை உயிர்ப்பித்து இருக்குமா? வானத்தை நோக்கித் தவம்கிடந்த மண்ணை, சிறுசிறு மழைத்துளிகளே காத்து வருகின்றன.

அப்படித்தானே அமைந்துள்ளது ஆயிரம் ரூபாய்? இதில் நிர்மலா சீதாராமனுக்கு என்ன வந்தது? அவரிடம் கேட்பது இல்லையே? அவரிடம் இருந்து வரும் பணத்தால் தருவதாக இருந்தால், ஒரு மாதம்கூட கணக்கில் போட முடியாதே? ‘அப்பன் வீட்டுப் பணமா?’ என்று கேட்பாரே அவர்!

**‘தாயினும் சாலப் பரிந்து - எல்லார்க்கும் எல்லாம்’ என்ற இதயமுள்ள இலக்கோடு ‘திராவிட மாடல்’ ஆட்சியை நடத்தி வரும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆட்சிப் பொறுப்புக்கு வந்ததும் - பதவியேற்றுக் கொண்டதும் - மகளிருக்கு கட்டணமில்லா பேருந்து வசதியை ஏற்பாடு செய்து கொடுத்தார். ‘600 ரூபாய் முதல் 1200 ரூபாய் வரை மாதம் தோறும் எங்களுக்கு மிச்சம் ஆகிறது, என்கிறார்கள் மகளிர்.**

‘பஸ்ஸுக்குப் பணமில்லை, அதனால் படிக்கப் போகவில்லை, அதனால் வேலைக்கு போகவில்லை’ என்ற முடக்கத்தில் இருந்த இலட்சக்கணக்கான மக்களுக்கு விடியலை ஏற்படுத்தினார் முதலமைச்சர் அவர்கள்.

அதன் தொடர்ச்சியாக வழங்கப்பட்ட திட்டம்தான் மாதம் தோறும் ஆயிரம் ரூபாய். ‘எங்க அண்ணன் ஸ்டாலின் மாதம் தோறும் வழங்கும் தாய் வீட்டுச் சீர்’ என்று பெண்கள் அளித்த பேட்டியை ஒன்றிய நிதி அமைச்சர் பார்த்திருக்க வேண்டும்.

‘தினமும் வீட்டு வேலைக்குப் போனேன், மாதம் 500 ரூபாய் கிடைத்தது. திடீரென்று உடல் நலமில்லை. இதனால் குண்டாக ஆகிவிட்டேன். வீட்டு வேலைக்கு இப்ப யாரும் என்னைக் கூப்பிட மறுத்துவிட்டார்கள். என்னடா பண்றதுன்னு முடங்கிக் கிடந்தேன். அடுத்த மாசத்துல இருந்து ஸ்டாலின் அய்யா ஆயிரம் ரூபா அனுப்ப ஆரம்பிச்சாங்க’ என்று காஞ்சிபுரத்தில் பெண் ஒருவர் அளித்த பேட்டியை நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் பார்த்திருக்க வேண்டும்.

**‘எனக்கு வேண்டியதை என் மகனிடம் கேட்காமல், நானே வாங்கிச் சாப்பிடுறேன்’ என்று ஒரு தாய் சொல்லும்போது கிடைப்பது அல்லவா, மேம்பாடு?**

**“மாத்திரையிலதான் உயிர் வாழ்றேன் தம்பி. அந்த மாத்திரைகள் வாங்குறதுக்கு இந்த ஆயிரம் ரூபாயை பயன்படுத்திக்கிறேன் தம்பி” என்கிறார் ஒரு மூதாட்டி.**

இவை எல்லாம் நிதியமைச்சரின் கண்ணுக்கு மேம்பாடாகத் தெரியவில்லையா? மேம்பாடு என்பது ‘பிசினஸ் வுமன்’களாக ஆக்குவது மட்டும் தானா?

**ஆணோ, பெண்ணோ சுயமரியாதையும் - தன்னம்பிக்கையும் கொண்டவர்களாக நினைக்க வைப்பதும் - நிமிர வைப்பதும் தான் மேம்பாடு ஆகும். அத்தகைய மேம்பாடு தான் முக்கியம். அதனைத் தான் உருவாக்கித் தருகிறது கலைஞர் மகளிர் உரிமைத் தொகைத் திட்டம். ‘இது உதவித் தொகை அல்ல, உரிமைத் தொகை’ என்றார் முதலமைச்சர் அவர்கள். உரிமை பெற்ற பெண்களாக கோடிக்கும் மேற்பட்ட பெண்களை ஆக்கி இருக்கிறது இந்தத் திட்டம்.**

ஆயிரம் ரூபாய் உரிமைத் தொகை வழங்குவது, மாண்புமிகு முதலமைச்சரின் பல்வேறு திட்டங்களில் அதுவும் ஒரு திட்டம். மகளிருக்கு சொத்தில் பங்கு தரும் சட்டம் போட்டது தி.மு.க. உள்ளாட்சி அமைப்புகளில் இட ஒதுக்கீடு வழங்கியது தி.மு.க. வேலைவாய்ப்புகளில் இடஒதுக்கீடு வழங்கியது தி.மு.க. மகளிருக்கு கோடிக்கணக்கான தொகைகள் கடனாக வழங்கி சுய தொழில்கள் செய்ய ஊக்குவித்தது தி.மு.க. மகளிர் சுய உதவிக் குழுக்களை அதிகமாக உருவாக்கியும், அதிகமாக கடன் வழங்கியும் சாதனை படைத்தவர்தான் மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள்.

**அரசுப் பள்ளியில் படித்து கல்லூரிப் படிப்பை எட்ட முடியாத மாணவியருக்கு மாதம் தோறும் ஆயிரம் ரூபாய் வழங்கும் ‘புதுமைப் பெண்’ திட்டத்தைக் கொண்டு வந்த புரட்சி முதலமைச்சர் மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்கள். மாணவிகள் கல்லூரிகளில் சேருவது 34 விழுக்காடு அதிகம் ஆகி இருக்கிறது. இதுவல்லவா மேம்பாடு?**

ஒன்றிய நிதி அமைச்சர், தான் கலந்துகொண்ட மாநாட்டின் தலைப்பை ஒழுங்காகப் படித்திருக்க வேண்டும். ‘வளர்ந்து வரும் பெண்கள் சந்திக்கும் தடைகள்’ குறித்த மாநாடு அது. ஆயிரம் ரூபாய் என்பது பெண்களின் தடைகளை உடைக்கும் நிதி ஆயுதம்!

‘என்னிடம் பணமில்லை, அதனால் தேர்தலில் போட்டியிட வில்லை’ என்று நிர்மலாவைப் புலம்பவிட்டார் மோடி. தமிழ் நாட்டுப் பெண்களை புலம்ப விடவில்லை முதலமைச்சர்.

# சிகாகோவில் 3 நிறுவனங்களுடன் ஒப்பந்தம்!

முதல் பக்கத் தொடர்ச்சி

இப்பயணத்தின் போது, சான் பிரான்சிஸ்கோ மற்றும் சிகாகோவில் உலகில் 10 முன்னணி தொழில் நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மேலும், சிகாகோ நகரில் 4.9.2024 அன்று ட்ரில்லியன்ட் நிறுவனத்துடன் 2000 கோடி ரூபாய் முதலீட்டில் தமிழ்நாட்டில் வளர்ச்சி மற்றும் உலகளாவிய உதவி மையம் (Development & Global Support Centre) மற்றும் உற்பத்தி மையத்தை நிறுவுவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. மேலும், உலகின் முன்னணி காலணி மற்றும் விளையாட்டு ஆடைகள் தயாரிப்பு நிறுவனமான நைக்கி மற்றும் உலகின் முன்னணி ஹெல்த்கேர் நிறுவனமான ஆப்டம் நிறுவனங்களின் உயர் அலுவலர்களை முதலமைச்சர் அவர்கள் சந்தித்து, தமிழ்நாட்டில் புதிய தொழில் முதலீடுகளை மேற்கொள்ள அழைப்பு விடுத்தார்.

அதன் தொடர்ச்சியாக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் 5.9.2024 அன்று சிகாகோவில், லிங்கன் எலக்ட்ரிக், விஷய் பிரிஷிஷன் மற்றும் விஸ்டியன் ஆகிய நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டன. அதன் விவரங்கள்:

**லிங்கன் எலக்ட்ரிக் நிறுவனம்**

லிங்கன் எலக்ட்ரிக் நிறுவனம் வெல்டிங் பொருட்கள், ஆர்க் வெல்டிங் உபகரணங்கள், வெல்டிங் பாகங்கள், பிளாஸ்மா மற்றும் ஆக்ஸி எரிபொருள் வெட்டும் உபகரணங்கள், ரோபோடிக் வெல்டிங் பொருட்களின் உலகளாவிய உற்பத்தி நிறுவனம் ஆகும். இது பார்ச்சூன் 1000 நிறுவனங்களில் ஒன்றாகும்.

இந்நிறுவனம் வட அமெரிக்கா, ஐரோப்பா, மத்திய கிழக்கு, ஆசியா மற்றும் லத்தீன் அமெரிக்காவில் 160க்கும் மேற்பட்ட நாடுகளையும்

42 உற்பத்தி இடங்களையும் உள்ளடக்கிய உலகளாவிய விநியோகஸ்தர்கள் மற்றும் விற்பனை அலுவலகங்களின் வலையமைப்பைக் கொண்டுள்ளது. இந்நிறுவனத்தின் உலகளாவிய தலைமையகம் அமெரிக்க நாட்டின் ஓஹியோவின் யூக்லிட்டில் அமைந்துள்ளது.

**புரிந்துணர்வு ஒப்பந்தம்**

**முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில், லிங்கன் எலக்ட்ரிக் நிறுவனத்திற்கும் தமிழ்நாடு அரசிற்கும் இடையே 500 கோடி ரூபாய் முதலீட்டில் செங்கல்பட்டு மாவட்டத்தில் லிங்கன் எலக்ட்ரிக் நிறுவனத்தின் ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு, உற்பத்தி மையத்தை விரிவாக்கம் செய்வதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. இப்புரிந்துணர்வு ஒப்பந்த நிகழ்வில், லிங்கன் எலக்ட்ரிக் இந்தியா நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் சிவபாதசுந்தரம் காஜா, முதுநிலை துணைத் தலைவர் கிரெக் டோரியா மற்றும் உயர் அலுவலர்கள் பங்கேற்றனர்.**

**விஷய் பிரிஷிஷன் நிறுவனம்**

விஷய் பிரிஷிஷன் நிறுவனமானது செமிகண்டக்டர்கள் மற்றும் எலக்ட்ரானிக் பாகங்களின் உற்பத்தி நிறுவனமாகும். இந்நிறுவனம் இஸ்ரேல், ஆசியா, ஐரோப்பா மற்றும் அமெரிக்கா நாடுகளில் உற்பத்தி ஆலைகளைக் கொண்டுள்ளது, அங்கு ரெக்டிஃபையர்கள், டையோட்கள், MOS FETகள், ஆப்டோ எலக்ட்ரானிக்ஸ், மின்தடையங்கள், மின்தேக்கிகள் போன்றவற்றை உற்பத்தி செய்கிறது. இந்நிறுவனத்தின் உலகளாவிய தலைமையகம் அமெரிக்க நாட்டின், பென்சில்வேனியாவின் மால்வெர்னில் அமைந்துள்ளது.

**புரிந்துணர்வு ஒப்பந்தம்**

**முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில், விஷய் பிரிஷிஷன் நிறுவனத்திற்கும் தமிழ்நாடு அரசிற்கும் இடையே 100 கோடி ரூபாய் முதலீட்டில் காஞ்சிபுரத்தில் சென்சார்ஸ் மற்றும் டிரான்ஸ்டியூசர்ஸ் (Sensors and Transducers) உற்பத்தி மையத்தை நிறுவுவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. இப்புரிந்துணர்வு ஒப்பந்த நிகழ்வில், விஷய் பிரிஷிஷன் நிறுவனத்தின் முதுநிலை விற்பனை மேலாளர் ஷிர்வர் ஸ்டீபன் மற்றும் உயர் அலுவலர்கள் பங்கேற்றனர்.**

இச்சந்திப்பின்போது, விஷய் பிரிஷிணன் நிறுவனத்தின் ஷிர்வர் ஸ்டீபன் அவர்கள், சென்னையில் அமைந்துள்ள தங்கள் தயாரிப்பு நிறுவனத்தை விரிவுபடுத்த உள்ளதாகவும், இதன்மூலம் அதிக அளவில் வேலைவாய்ப்பு கிடைக்கும் என்றும், தங்கள் நிறுவனத்தின் விற்பனை அதிகரிக்கும் என்றும் தெரிவித்தார். தொடர்ந்து தங்கள் நிறுவனத்திற்கு ஆதரவு அளித்து வருவதற்காக முதலமைச்சர் அவர்களுக்கும், தமிழ்நாடு அரசிற்கும் நன்றி தெரிவித்துக் கொண்டார்.

**விஸ்டியன் நிறுவனம்**

விஸ்டியன் நிறுவனமானது ஃபோர்டு மோட்டார் நிறுவனத்தின் துணை நிறுவனமாகும். அமெரிக்க நாட்டின் மிச்சிகனில் உள்ள வான் ப்யூரன் டவுன்ஷிப்பைத் தலைமையிடமாகக் கொண்டு, விஸ்டியன் உலகளவில் 17 நாடுகளில் இயங்கி வருகிறது, இது பார்ச்சூன் 500 நிறுவனங்களில் ஒன்றாகும்.

இது உலகளாவிய வாகன மின்னனுவியல் சப்ளையர் நிறுவனமாகும், இது வாகனங்களின் காக்பிட் அனுபவத்தை மேம்படுத்தும் மின்னணு தயாரிப்புகளை வடிவமைத்தல் மற்றும் தயாரிப்பதில் நிபுணத்துவம் பெற்றது, இதில் இன்ஸ்ட்ருமென்ட் கிளஸ்டர்கள், டிஸ்ப்ளேக்கள் மற்றும் இன்ஃபோடெயின்மென்ட் சிஸ்டம்கள் ஆகியவை அடங்கும்.

இந்நிறுவனம் மெக்ஸிகோ, பிரேசில், அர்ஜென்டினா, போர்ச்சுகல், இங்கிலாந்து, ஜெர்மனி, பிரான்ஸ், ஸ்லோவாக்கியா, ருமேனியா, பல்கேரியா, ஹங்கேரி, துனிசியா, இந்தியா, சீனா, தாய்லாந்து, கொரியா மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளில் உற்பத்தி மற்றும் பொறியியல் மையங்களை கொண்டுள்ளது. ஃபோர்டு, ஜென்ரல் மோட்டார்ஸ், BMW மற்றும் Volkswagen போன்ற உலகின் பெரும் வாகன உற்பத்தியாளர்களுக்கு வாகன மின்னனுவியல் பாகங்களை தயாரித்து அளித்து வருகிறது.

**புரிந்துணர்வு ஒப்பந்தம்**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில், விஸ்டியன் நிறுவனத்திற்கும் தமிழ்நாடு அரசிற்கும் இடையே 250 கோடி ரூபாய் முதலீட்டில் சென்னை மற்றும் கோயம்புத்தூரில் மின்னணு உற்பத்தி மையத்தை நிறுவுவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. இப்புரிந்துணர்வு ஒப்பந்த நிகழ்வில், விஸ்டியன் நிறுவனத்தின் தலைவர் மற்றும் முதன்மை செயல் அலுவலர் சச்சின் லாவண்டே, துணைத் தலைவர் பிரான்சிஸ் கிம், இயக்குநர் ரியான் கசாரி மற்றும் உயர் அலுவலர்கள் பங்கேற்றனர்.**

**லிங்கன் எலக்ட்ரிக், விஷய் பிரிஷிஷன் மற்றும் விஸ்டியன் ஆகிய நிறுவனங்களுடன் மேற்கொள்ளப்பட்ட இப்புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மூலம் தமிழ்நாட்டு இளைஞர்களுக்கு அதிக அளவிலான வேலைவாய்ப்புகள் கிடைக்கும் என்பது குறிப்பிடத்தக்கது.**

இந்நிகழ்வின்போது, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை செயலாளர் வி.அருண் ராய், தொழில் வழிகாட்டி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மற்றும் தலைமைச் செயல் அலுவலர் வே.விஷ்ணு மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

# கல்வராயன் மலையில் 1,082 பயனாளிகளுக்கு ரூ.1.91 கோடியில் நலத்திட்ட உதவிகள் !

## அமைச்சர் எ.வ.வேலு வழங்கினார்!

*கச்சிராயப்பாளையம், செப்.8-*

கல்வராயன் மலையில் 1,082 பயனாளிகளுக்கு ரூ.1.91 கோடியில் நலத்திட்ட உதவிகளை பொதுப் பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் அமைச்சர் எ.வ. வேலு கலந்துகொண்டு வழங்கினார்.

கள்ளக்குறிச்சி மாவட்டம் கல்வராயன் மலையில் உள்ள மலைவாழ் மக்களுக்கு தமிழக அரசின் சார்பில் நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி கரியாலூரில் உள்ள கோடை விழா அரங்கில் நடைபெற்றது.

இதற்கு மாவட்ட ஆட்சியர் எம்.எஸ்.பிரசாந்த் தலைமை தாங்கினார், வடக்கு மற்றும் தெற்கு மாவட்ட கழக செயலாளர்கள் தா.உதயசூரியன் எம்.எல்.ஏ, வசந்தம் க. கார்த்திகேயன் எம்.எல்.ஏ, கள்ளக்குறிச்சி எம்.பி. தே. மலையரசன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

சிறப்பு அழைப்பாளராக பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு கலந்துகொண்டு 1,082 பயனாளிகளுக்கு ரூ.1 கோடியே 91 லட்சத்து 15 ஆயிரத்து 880 மதிப்பீட்டில் வன உரிமைச்சான்று, வீட்டுமனைப் பட்டா, கறவை மாடுகள் வழங்கும் திட்டம், அமுதசுரபி கடன் திட்டம், விவசாய நடுத்தர கடன் திட்டம் உள்ளிட்ட பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

அப்போது அமைச்சர் எ.வ.வேலு பேசுகையில், கல்வராயன் மலை மக்களுக்கு தமிழக அரசின் சார்பில் எந்த ஒரு திட்டங்களும் செயல்படுத்தவில்லை என சிலர் பிரமையை உருவாக்கிக் கொண்டிருக்கிறார்கள், ஆனால் கழக அரசு பொறுப்பேற்றது முதல் கடந்த 3 ஆண்டுகளாக கல்வராயன் மலையில் எண்ணற்ற வளர்ச்சி திட்டங்களை செயல்படுத்தி வருகிறது, இப்பகுதி சட்ட மன்ற உறுப்பினரின் கோரிக்கையினை ஏற்று, ஏற்கனவே இப்பகுதி மக்களுக்கு சுமார் 2,000 பேருக்கு வன உரிமைச் சான்றுகள் மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் வழங்கப்பட்டுள்ளது.

அதன் தொடர்ச்சியாக இன்றைய தினம் 550 பயனாளிகளுக்கு வன உரிமைச் சான்று வழங்கப்பட்டுள்ளது, மேலும் மக்களுக்கு ஏராளமான நலத் திட்ட உதவிகள் வழங்கப் பட்டுள்ளது, மாவட்ட நிர்வாகமும் வனத்துறை நிர்வாகமும் ஒருங்கிணைந்து செயல்படுவதன் மூலம் கல்வராயன் மலை மக்களின் வாழ்வினை மேலும் முன்னேற்ற முடியும், பொதுமக்களுக்கு உறுதுணையாக இருப்பது தான் சட்டம், மலைவாழ் மக்களின் வாழ்வினை மேம்படுத்திய பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வரும் திராவிட மாடல் நாயகர், சமூக நீதி காவலர், கழகத் தலைவர், தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்களின் ஆட்சிக்கு பொதுமக்கள் அனைவரும் என்றென்றும் உறுதுணையாக இருந்து வருகிறார்கள், அதற்கு ஒரு சாட்சியாக தற்போது நடந்து முடிந்த நாடாளு மன்ற தேர்தலில் தமிழகம் மற்றும் புதுச்சேரி உள்பட 40க்கு 40 தொகுதிகளில் கழக வேட்பாளர்கள் மற்றும் கூட்டணி கட்சி வேட்பாளர்களை மக்கள் அமோக வெற்றி பெற செய்துள்ளனர், இது கழகத் தலைவர், தமிழகத்தின் முதல்வர் மீது மக்கள் நம்பிக்கை வைத்து வாக்களித்து வெற்றி பெற செய்தது கழக கூட்டணிக்கு கிடைத்த மிகப்பெரிய வெற்றி, மேலும் கழக அரசு புதுமைப்பெண் திட்டம்,நான் முதல்வன் திட்டம், தமிழ் புதல்வன் திட்டம், மகளிர்க்கு மாதம் தோறும் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை ஆயிரம் ரூபாய் வழங்குகின்ற திட்டம், மகளிர்க்கு அரசு பேருந்துகளில் கட்டணமில்லா பயண திட்டம், அரசு பள்ளிகளில் காலை உணவு வழங்கும் திட்டம் உள்ளிட்ட எண்ணற்ற திட்டங்களை இதுபோன்று அடுக்கி கொண்டே போகலாம், ஆகவே வருகின்ற 2026 சட்டமன்ற தேர்தலிலும் நமது கழக அரசுக்கும், தமிழக முதலமைச்சருக்கும் பொதுமக்கள் அனைவரும் என்றென்றும் உறுதுணையாக இருப்பார்கள் என்று பேசினார்.

விழாவில் தலைமை வன பாதுகாவலர் பெரியசாமி, மாவட்ட வன அலுவலர் (பொறுப்பு) சுமேஷ் சோமன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குனர் ரமேஷ்குமார், கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் முருகேசன், வருவாய் கோட்டாட்சியர் லூர்துசாமி, தாட்கோ மாவட்ட மேலாளர் பியர்லின், துணை தாசில்தார் அந்தோணி ராஜ், உதவி பொறி யாளர் அருண் ராஜா கல்வராயன் மலை ஒன்றிய கழக செயலாளர்கள் வேங்கோடு கிருஷ்ணன், கரியாலூர் சின்னத்தம்பி,

ஒன்றியக்குழு தலைவர் சந்திரன், துணை தலைவர் பாட்ஷா பி.ஜாகிர் உசேன், சின்னசேலம் ஒன்றிய குழு தலைவர் சத்தியமூர்த்தி, துணைத்தலைவர் அன்பு மணிமாறன், வடக்கு மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் அருள், ஊராட்சி மன்ற தலைவர் ரத்தினம் அர்ச்சனா, லட்சுமணன், அண்ணாமலை, ஒன்றிய கவுன்சிலர் மணியார் பாளையம் சக்தி மற்றும் அனைத்து துறை அலுவலர்கள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர், கழக நிர்வாகிகள் பொதுமக்கள் உள்பட பலர் கலந்து கொண்டனர். விழா முடிவில் கல்வராயன் மலை தாசில்தார் கோவிந்தராஜன் நன்றி கூறினார்.



சென்னை, அசோக் நகர் மகளிர் மேல்நிலைப் பள்ளியில் பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி பள்ளிக் கல்வித்துறை சார்பில் பொதுத் தேர்வு குறித்து “கல்வியே சமத்துவம் மலரச் செய்யும் மிகப் பெரிய ஆயுதம்” எனும் தலைப்பில் மேல்நிலைப்பள்ளி வகுப்பு மாணவர்களுக்கான விழிப்புணர்வு கருத்தரங்கினை தொடங்கி வைத்து சிறப்புரை ஆற்றினார். இந்நிகழ்ச்சியில் பள்ளிக்கல்வித்துறை இயக்குனர் முனைவர் கண்ணப்பன், மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் மார்ஷ், தமிழ் ஆசிரியர் சங்கர், ஆசிரியர்கள், மாணவிகள் கலந்து கொண்டனர்.